C.P.No.92/2018
Date: 19 -11-2020
Witness: MW 1 Thiru.K. Rajagopalan

சாட்சிக்கு பிரமாணம் செய்விக்கப்பட்டு சாட்சியிடம் மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை -

எதிர்மனுதாரர் நிறுவனம் ஒரு பங்குதாரர் நிறுவனம் என்றால் ஆமாம். அதில் நானும் என் மனைவியும் பங்குதாரர்கள் என்றால் ஆமாம். எங்கள் இருவருக்கும் இந்த நிறுவனத்தை நடத்துவதற்கு அதிகாரம் உள்ளது என்றால் ஆமாம். மனுதாரர் எங்கள் நிறுவனத்தில் பணியில் சேர்ந்தபோது பணி நியமன உத்தரவு வழங்கினோமா என்றால் அது எனக்கு ஞாபகம் இல்லை. மனுதாரர் பணியில் சேர்ந்தபோது அவருக்கு நாங்கள் பணி நியமன உத்தரவு வழங்கவில்லை என்றால் அது பற்றி எனக்கு ஞாபகம் இல்லை. மனுதாரருக்கு பணி நியமன உத்தரவு வழங்கியிருந்தால் அதில் அவருக்கு கிடைக்க வேண்டிய வருடாந்திர ஊதிய உயர்வு எவ்வளவு என்பதும், அவருக்கு வழங்கவேண்டிய மற்ற சலுகைகள் எவை என்பதும் குறிப்பிடப்பட்டிருக்கும் என்றும் ஆனால் அதுபோன்று உத்தரவு நாங்கள் வழங்கவில்லை என்றும் சொன்னால் அது பற்றி ஞாபகம் இல்லை, ஆனால் மனுதாரருக்கு ஊதிய உயர்வு , மற்றும் போனஸ், மற்றும் இதர அலவன்ஸ் வழங்குவதற்கு முன்பு அவருக்கு E.Mail மூலம் தகவல் தெரிவித்து அவரிடம் Confirmation பெற்றுதான் வழங்கியுள்ளோம். 2018 ம் ஆண்டு மனுதாரருக்கு Increment எவ்வளவு ரூபாய் வழங்கினோம் என்றால் ரூ.4370/- வழங்கினோம், அதற்கு Mail தாக்கல் செய்துள்ளேன். 24.02.2018 அன்று மனுதாரர் தனக்கு increment

வழங்கப்படவில்லை என்று நிறுவனத்திற்கு Mail அனுப்பினார் என்றால் ஆமாம். அதற்கு பதில் அனுப்பினோமா என்றால் அனுப்பினோம். எல்லா வருடமும் அவருக்கு Increment கொடுத்தோமா என்றால் , எல்லா வருடமும் கொடுக்கவில்லை, அவருடைய Performance அடிப்படையில்தான் increment கொடுக்கப்படும். என்னென்ன செயல்பாடுகள் செய்தால் எவ்வளவு Increment கொடுக்கப்படும் என்று எழுத்துபூர்வமாக அவருக்கு உத்தரவு வழங்கியுள்ளோமா என்றால் E.Mail மூலம் உத்தரவு வழங்கியுள்ளோம். அந்த E.Mail உத்தரவு இந்த வழக்கில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் என்னிடம் காட்டப்படும் Ex.M.27 ல் அந்த உத்தரவு தாக்கல் செய்துள்ளேன். Ex.M.27 E.Mail ல் நான் சொல்வது போல increment தொகை பற்றி குறிப்பாக கூறப்படவில்லை என்றால் சரிதான், ஆனால் Personal Meeting சமயத்தில் Target மற்றும் incentive, increment பற்றி முடிவு செய்வோம். Personal Meeting ல் எடுக்கப்படும் மேற்படி முடிவுகள் குறித்து minutes ஏதாவது இந்த வழக்கில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை, பங்குதாரர் நிறுவனம் பொருத்தவரையில் Meeting minutes போட வேண்டிய அவசியம் இல்லை என்பதால் minutes போடவில்லை. நான் சொல்வது போல் Meeting எதுவும் போடவில்லை என்றும் Meeting போடப்பட்டு தீர்மானம் எடுத்ததாக இந்த வழக்கிற்காக பொய் சொல்கிறேன் என்றும் சொன்னால் சரியல்ல. மனுதாரர் குறித்த நேரத்தில் வேலைக்கு வராமல் இருந்தார் என்று கூறியுள்ளேன் என்றால் ஆமாம், அவ்வாறு அவர் குறித்த நேரத்தில் வேலைக்கு வராமல் இருந்தார் என்று கூறுவது எனக்கு எப்போது தெரியவந்தது என்றால் ஜனவரி 2018 முதல் அவர் அவ்வாறு குறித்த நேரத்தில் வேலைக்கு வராமல் இருந்தார் என்று எனக்கு தெரியவந்தது. 17.09.2018 தேதியிட்ட Ex.M.4 Mail ல் தான் நான் மனுதாரர் குறித்த

நேரத்தில் வேலைக்கு வராமல் இருந்தது பற்றி அவரிடம் விளக்கம் கேட்டுள்ளேன் என்றால் அதற்கு முன்பே Whatsapp மற்றும் SMS மூலம் அவரிடம் இதுபற்றி விளக்கம் கேட்டுள்ளேன். நான் கூறும் Whatsapp மற்றும் SMS தகவல் 2019 ம் வருடம்தான் மனுதாரருக்கு அனுப்பப்பட்டுள்ளது என்பது Ex.M.5 மூலம் தெரியவருகிறது என்றால் மேற்படி Whatsapp மற்றும் SMS தகவல் ஜனவரி 2018 லேயே மனுதாரருக்கு அனுப்பியுள்ளது Ex.M.5 ல் உள்ளது. மனுதாரரை 21.09.2018 ல் வேலை நீக்கம் செய்தோம் என்றால் ஆமாம். மனுதாரரை வேலை நீக்கம் செய்வதற்கு முன்பு விசாரணை எதுவும் நடத்தவில்லை என்றால் ஆமாம்.

( குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக வழக்கறிஞர் வேண்டுகோளின் பேரில் ஒத்திவைக்கப்படுகிறது)